# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.No.255/2016** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **பி.வா.சா- 01 (DW- 01)** |
| **பெயர்** | :- | **சின்னு** |
| **தேதி** | :- | **10-03-2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை**

வாதி எதற்காக வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சொத்துக்காக வழக்கு தொடுத்துள்ளார். என் தகப்பனார் பெயர் கந்த மூப்பன். கந்த மூப்பனுக்கு 02 மனைவி. மூத்த மனைவி பெயர் அங்கம்மாள். 02-ஆம் மனைவி பெயர் கந்தாயி. அங்கமாளுக்கு பழனிசாமி, பெரியண்ணன், முத்து, சின்னு என்கிற 04 மகன்கள். கந்தாயிக்கு முத்துசாமி என்பவர் மட்டும் மகன். கந்தாயியை கந்த மூப்பன் திருமணம் செய்துகொண்டபோது அங்கம்மாள் உயிரோடு இருந்தார். வழக்குரையிலும் வாதியின் முதல் விசாரணையிலும் வாதி என்ன சொல்லியுள்ளார் என்று எனக்குத் தெரியாது.

கந்த மூப்பனின் அப்பா பெயர் பழனியாண்டி மூப்பன். கந்த மூப்பனுக்கு அங்கம்மாள் மட்டும்தான் மனைவி என்றும் கந்தாயி அவருக்கு 02-ஆம் மனைவி இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. கந்த மூப்பனுக்கு பெரிய பையன் என்கிற பழனிசாமி, தூங்கான் என்கிற பெரியண்ணன், வாதி முத்து என்கிற முத்துசாமி, சின்னு ஆகியோர் மட்டுமே பிள்ளைகள் என்றால்

சரிதான். கந்தாயிக்கும் கந்த மூப்பனுக்கும் முத்துசாமி என்கிற மகன் பிறக்கவில்லை என்றால் சரியல்ல. கந்தாயி ஏற்கனவே கந்தன் என்பவருக்கு திருமணம் செய்துகொடுக்கப்பட்டார் என்றும் கந்தன் உடனே இறந்து -விட்டதால் கந்த மூப்பன் கந்தாயி உடன் முறையற்ற உறவுகொண் டிருந்தார் என்றும் அவர்கள் இருவருக்கும் குழந்தைகள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பெரிய பையன் என்கிற பழனிசாமியின் மனைவி பெயர் கமலா. அவர்கள் இருவருக்கும் ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர் என்றால் இல்லை. குமார் என்ற மகனும் இந்த வழக்கின் 03-ஆம் பிரதிவாதி இன்பவள்ளியும் அவர்களின் பிள்ளைகள் என்றால் சரியல்ல. குமார் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

தூங்கான் என்கிற பெரியண்ணனின் மனைவி பெயர் பூங்காவனம் என்றால் அது எனக்குத் தெரியாது. அவர்களின் மகன் முனியன் என்றால் அது எனக்குத் தெரியாது. 02-ஆம் பிரதிவாதிதான் அந்த முனியன் என்றால் அது எனக்குத் தெரியாது. மேற்சொன்ன சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்றாக தெரியும் என்றும் அதை சொன்னால் இந்த வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் நான் தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு ஆதார் அட்டை உள்ளது. எனது ஆதார் அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல்செய்யமுடியும். நான் 1960-ஆம் ஆண்டு பிறந்தேன்.

பழனியாண்டிக்கு எத்தனை சகோதரர்கள் என்றால் ஐவர். பெரிச்சி மூப்பன், கந்த மூப்பன், கூலைய மூப்பன், அம்மாசி மூப்பன், சுப்பரமணி ஆகிய ஐவர் என்றால் சரிதான். சகோதரிகள் ஐவர் உள்ளனர். நான் எதிர்வழக்குரையில் சொன்ன சங்கதிகளைதான் முதல் விசாரணையில்

சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும் 03-ஆம் பிரதிவாதி இன்பவள்ளியும் மட்டும்தான் இந்த வழக்கை எதிர்த்து நடத்துகிறோம் என்றால் சரிதான். அம்மாசியும் கந்த மூப்பனும் வழக்கு சொத்தை பாதியாக பிரித்துக் கொண்டார்கள் சரிதான். பத்திரம் எழுதிக்கொள்ளவில்லை. பட்டா மாற்றிக் கொண்டார்கள். பட்டாவை இந்த வழக்கில் தாக்கல்செய்யவில்லை. எப்போது வேண்டுமானாலும் தாக்கல்செய்யமுடியும்.

கந்த மூப்பன் உயிரோடு இருந்தபோது அங்கமாளுக்கும் கந்த மூப்பனுக்கும் பிறந்தவர்கள் மட்டும் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டனர் என்றால் கந்தாயின் மகனும் சேர்த்து பாகம் பிரித்துக் கொண்டனர். நால்வரும் மட்டும்தான் பிரித்துக் கொண்டனர் என்றால் சரியல்ல.

நான் சொல்லும் கந்தாயி மகன் முத்துசாமியின் மனைவி பெயர் கமலி. மேட்டூர் வட்டத்தில் உள்ள பாரகலூரை சேர்ந்தவர் கமலி. முத்துசாமிக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் எந்த ஆண்டு என்று தெரியவில்லை. எனக்கு 5 வயது இருக்கும்போது அவருக்கு திருமணம் நடந்திருக்குமா என்றால் இருக்கும்.

கந்த மூப்பன் எப்போது இறந்தார் என்றால் 30 ஆண்டுகள் இருக்கும். அங்கம்மாள் இறந்து 25 ஆண்டுகள் இருக்கும். பெரிய பையன் என்கிற பழனிசாமி 2001-ஆம் ஆண்டு இறந்தார் என்றால் எனக்குத் தெரியவில்லை. அவருடைய மனைவி கமலா 1982-ஆம் ஆண்டு இறந்தார் என்றால் எனக்குத் தெரியவில்லை. தூங்கான் என்கிற பெரியண்ணன் 1975-ஆம் ஆண்டு இறந்தார் என்றால் இருக்கலாம். அவருடைய மனைவி அவருக்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் எனக்குத் தெரியவில்லை. கந்தாயி

அங்கம்மாள் இறந்தபின் 02 ஆண்டுகள் கழித்து இறந்தார். நான் பொய் சொல்கிறேன் என்றும் கந்தாயி 2018-ஆம் ஆண்டுதான் இறந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. கந்தாயிக்கு குழந்தைகள் இல்லை என்றும் கந்தாயின் முதல் கணவர் வீட்டை சேர்ந்த ஆறுமுகம் வகையறாவினர்தான் இறுதி சடங்கு செய்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கை திசை திருப்ப கந்தாயி பற்றி தவறான சங்கதிகளை சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பெரிய பையன் என்கிற பழனிசாமியின் மகள்தான் 03-ஆம் பிரதிவாதி இன்பவள்ளி என்றால் சரியல்ல. நான் பொய்யான ஆவணங்களை தயாரித்து இந்த வழக்கை பொய்யாக எதிர்த்து நடத்துகிறேன் என்றால் சரியல்ல.

சிக்கம்பட்டி ஊரில் நான் சொல்வது போன்று பூர்வீக சொத்து எதுவும் இல்லை என்றும் இருப்பதாக நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

முத்துசாமியின் இறப்பை பதிவுசெய்ய நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது நான்தான் என்றால் இல்லை. இன்பவள்ளிதான் மனுதாரர். நான்தான் மனு கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையின்பேரில் நான் இறப்பு சான்று பெற்றேன் என்றால் இல்லை. வருவாய் துறையினர் விசாரித்தனரா என்றால் விசாரித்தனர். சாட்சி தரப்பு 01-ஆம் சான்றாவணத்தில் முத்துசாமியின் மனைவி பெருமாயி என்றுதான் உள்ளது என்றும் கமலி என்று இல்லை என்று சொன்னால் கமலி என்றுதான் அழைப்பார்கள். முத்துசாமி என்ற யாரும் இல்லை என்றும் அதனால்தான் முன்னுக்குபின் முரணமாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

வாதியும் அவரது சகோதரர் பழனிசாமியும் பெரியண்ணனிடம் 20.09.1974-ஆம் தேதியன்று 23 4/5 செண்ட் இடத்தை கிரயம் வாங்கி -யுள்ளார்கள் என்றால் சொன்னால் வாதி வாங்கவில்லை கந்தாயி மகன் முத்துசாமி வாங்கினார். வாதிதான் வாங்கினார் என்றால் சரியல்ல. பழனிசாமியிடமிருந்து வாதி 12 செண்ட் நிலத்தை 23.05.1980-ஆம் தேதியன்று கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. கந்தாயி மகன் முத்துசாமி தான் வாங்கினார். நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

கந்த மூப்பன் இறந்த பிறகு அவருடைய பாகத்தை தலைக்கு 2.4 செண்ட் வீதம் அவருடைய 04 மகன்கள் மட்டும் பிரித்துக் கொண்டனர் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினையின் அடிப்படையிலும் வாதிக்கு 60 செண்ட் நிலம் சொந்தமானது என்றால் சரியல்ல.

23.05.1980-ஆம் தேதியன்று நான் பழனிசாமியிடம் இருந்து 29 ¾ செண்ட் இடத்தை கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். பழனிசாமிக்கு 24 செண்ட் மட்டுமே உரிமையான நிலையில் 29 ¾ செண்ட் விற்க அவருக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் மோசடியாக அதிக பரப்பளவை கிரயம் வாங்கினேன் என்றால் சரியல்ல. கந்த மூப்பனும் பெரியண்ணனும் எழுதிக்கொடுத்த பத்திரங்களை மறைத்து நான் மோசடியாக ஆவணங்கள் எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. மோசடி தெரியவந்ததில் இருந்து 03 ஆண்டுக்குள் இந்த வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

அம்மாசியின் வாரிசுகளை இந்த வழக்கின் தரப்பினராக சேர்க்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

(தரப்பினர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.